1982 மார்ச் 11]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பு நிலையங்கள் வாயிலாக பெண்களுக்கு தினக் கூலியாக கொடுக்கப்படவில்லை. சிட்டத்திற்கு 30 பைசா, 40 பைசா என்று கொடுக்கிறோம். சாராசரியாக 4 ரூபாய், 5 ரூபாய் என்று பெற்று வருகிறார்கள். திறமையாக வேலை பார்க்கிற பெண்கள் சில இடங்களில் 8 ரூபாய் முதல் 9 ரூபாய் வரை பெற்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கிர் முகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த கிராம நூற்பு நிலையங்களில் பி.எஸ்சி., பி.ஏ. படித்த பட்டதாரி பெண்கள் வேலை பார்த்து வருகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அடிப்படையிலே சராசரியாக 10 ரூபாய் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பட்டதாரியாக இருக்கிற கிராமப் பெண்கள், மற்றும் வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் இந்த நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவர்களுக்கு கூடுதலாக கூலி கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் பாலியஸ்டர் சிட்டம் தயாரிப்பதை அறிமுகப்படுத்தி, இப்போது ஆறு ஸ்பின்டல்கள் வேலை பார்த்து வருவது 12 ஸ்பின்டல்கள் என்று மாற்றப்பட்டு வருகிறது. இதன் மூலம் அதிகபட்ச கூலி கிடைப்பதற்கு வழிவகை இருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புதியதாக 150 கிராம நூற்பு நிலையங்கள் துவங்க விருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாவட்ட வாரியாக அதன் விவரத்தை அறிவிக்க இயலுமா ? திருச்சி மாவட்டத்திலே எத்தனை நிலையங்கள் துவங்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சேலம் மாவட்டத்தைப் பொறுத்து அமைந்திருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

## Palm Leaves ındustries in Thanjavur District

*Q. No. 476 THIRU S. RAJARAMAN: Will the Hon. the Minister for Khadi and Public Works be plearsed to state—

(a) whether there are proposals under the consideration of the Governmeut to set up a chain of sm ll industries with Palm Leaves at Senganur in Thiruvidaimarudur Taluk in Thajnavur District and

(b) if so, the details there of?

[1982 மார்ச் 11

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது குறிப்பிட்டது போல வருங்காலத்திலாவது ஏழ்மை நிலையில் இருக்கிற கிராம மக்கள் சிறு தொழில்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா ? இந்தத் தொழில் தெரிந்து, பயிற்சி பெற்றுள்ளவர்கள் ஊக்கம் பெறுகிறஅளவில் அரசாங்கம் முன் உதவி அளிக்க முன் வருமா என்பதைஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கேள்வி திருவிடைமருதூர் வட்டத்திலுள்ள செங்கனூரில் பனை ஓலைகளைக் கொண்டு முடைவோர் சங்கம் துவங்கப்படுமா என்பது. அதிலே வேலை பார்ப்பவருகளுக்கு 4 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையில் தான் கூலி கிடைக்கும். தஞ்சாவூர் மாவட்டத்திலே விவசாயம் செய்யக் கூடிய காலங்களில் அவர்களுக்கு கூலி 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் கிடைக்கும் என்பதால் இதிலே வேலை பார்ப்பதற்கு முன்னுக்கு வர தயங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது சிறு தொழில்கள் பார்ப்பதற்கு பயிற்சி பெற்றவர்களுக்கு கதர் வாரியத்தின் மூலமாக கடனுதவி அளிப்பதற்கு முன் வருவார்களா என்று கேட்டார்கள். திறமை பெற்றவர்கள் ஆர்வம் உள்ளவர்கள் மனு செய்தால் எந்த தொழிலாக இருந்தாலும் கடனுதவி செய்வதற்கு கதர் வாரியம் தயாராக இருக்கிறது. இதற்காக தக்க விளம்பரம் செய்திருக்கிறோம். ஆகவே வேண்டியவர்கள் உதவி பெறலாம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது தஞ்சாவூர் மாவட்டத்திலே விவசாய கூலி அதிகமாக இருப்பதால் இந்தத் தொழில்களுக்கு வருவது கடினம் என்று சொன்னார்கள்.

நான் கேட்டுக் கொள்வது ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பனை ஓலையின் மூலமாக பயிற்சி அளிக்கிறார்கள். அந்தப் பயிற்சிக்குப் பிறகு வேலை கிடைக்காமல் ஆயிரக்கணக்கானவர்கள் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் பனை மூலமாக செய்யப்படுகின்ற பொருட்களைத் தயாரிப்பவர்கள் நிரந்தரமாக்கப்படக்கூடிய முறையிலே வேலை கொடுக்கக்கூடிய முறையிலே அந்தத் தொழிற்சாலையை அமைக்க பரிசீலனை செய்யப்படுமா ? அதை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிப்பார்களா ?

1982 மார்ச் 11]

[முற்பகல் 10·10]

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, பனை ஓலை மூலம் தயாரிக்கப் படுகின்ற பொருட்களுக்கு வெளி நாடுகளிலே மிக அதிகமாக கிராக்கி இருக்கின்ற காரணத்தினால் டிரெயினிங் சென்டர்ஸ் பயிற்சி நிலையங்கள் தமிழகத்திலே உருவாக்கி டிரெய்னிங் முடிந்த பிறகு அதே சென்டரை புரடக்ஷன் சென்டராக மாற்றி யமைத்து அங்கே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வாரியம் நடவடிக்கை எடுத் துக் கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். என். இராமசாமி :** துணைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே பூச்சிக் காட்டிலே அதிகப் பனைகள் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரி யும். அங்கே சிறு தொழில் ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே அமைக்கப்படுமா என்ற கேள்வி பூச்சிக் காட்டிற்குச் சென்றிருக்கிறது. எங்கெங்கே பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றனவோ எங்கெங்கே பெண்கள் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்களோ அந்தப் பகுதி களிலே அதற்கான வாய்ப்பு இருக்குமானால், வசதி இருக்கு மானால் இப்படிப்பட்ட டிரெயினிங் சென்டரை வாரியம் உரு வாக்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் வாய்ப்பு இருக்கு மானால் வாரியம் பரிசீலனை செய்யும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** துணைத் தலைவர் அவர் களே, கேள்வி "தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட் டத்திலுள்ள செங்கனூரில் பனை ஓலைகளைக் கொண்டு சிறு தொழில்களைத் தொடர்ந்து அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?" என்று கேட்கப்பட்டு இருக்கிறது. அந்தத் தொழில்களைத் தொடர்ந்து அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று கேட்கிறபோது பனைமரத் தொழில் நடைபெற்று வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து செய்யப்படுமா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதிலைச் சொல்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:** ஏற்கெனவே விடை அளித்திருக்கிறேன். தொடர்ந்து கொடுக்க முடியுமா என்பதற்கு விடை (அ) இல்லை என்றும், (ஆ) இவ்வினாவிற்கு விடை இல்லை என்றும் சொல்லி இருக்கிறேன். காரணத்தை யும் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் கேட்டதற்குப் பதில் சொல்கிறபோது சொல்லியிருக்கிறேன்.

[1982 மார்ச் 11

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, பனைப் பொருட்கள் தயாரிக்கும்போது அந்த ஓலை வெள்ளையாக இருப்பது சில நாட்களில் மங்கி விடுகிறது என்று கூறுகிறார்கள். அதற்காக ஆராய்ச்சி செய்து அந்த மங்காத வெள்ளை கலரிலேயே அது இருக்கும்படி செய்யப்படும் என்று சொல்லப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பனை ஓலை காய்ந்த பின்னர்தான் அந்தப் பொருள்களைத் தயாரிக்கிறார்கள். அதிலே கலரை மாற்றவோ கலரைக் கொடுக்கவோ போன்ற காரியங்களை வாரியம் செய்து கொண்டிருக்கிறது. வெளிநாடுகளிலே தொப்பி போன்ற பொருட்களை அவர்கள் விரும்பி வாங்குகிறார்கள். விவசாயிகள் வெய்யில் நேரத்திலே வேலை செய்கிறபோது வெய்யில் அவர்கள் மீது படாமல் இருப்பதற்காக அகலமான தொப்பிகளைப் பயன்படுத்துகிறார்கள். அதுபோன்ற தொப்பிகளை தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகளும் பயன்படுத்தினால் வெய்யிலிலிருந்து பாதுகாத்துக் கொள்வது மட்டுமல்ல, ஆரோக்கியத்துக்கும் நல்லது என்ற சூழ்நிலை இருக்கிறது. பாதுகாப்பிற்காகப் பயன்படுத்துகிறார்கள் ஆகவே மாற்றம் ஏற்படுவதாக இல்லை.

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்

எண் 1—650 உடுக்குறியிடாத வினாக்களையும், அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் காண்க.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்* முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

பேரவை நிகழ்ச்சிகளின் சுருக்க வெளியீடு.

திரு. வெ. இராஜசேகரன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. நேற்றைய விஷயம் நேற்றோடு முடிந்து விட்டது. அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.